

## வாரந்தோறும் ஒரு தீபம்!

**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம்119:105)**

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

(வியாழன்தோறும்)

| 30.08.2018 | 07. அவரது பணிக்கு ‘நொறுங்குண்ட’ தாசர்களே தேவை! |
|---|---|



**த**னது ராஜரீக ஊழியத்திற்கு ‘அழைப்பு கொண்டவனையே’ தேவன் கோதுமைமணியாய் தெரிந்தெடுத்து.... அவனை நொறுக்குகிறார்! மோசேயைப் போன்ற வனாந்திர ஜீவியமோ, யோசேப்பை போன்ற அடிமையின் சிறைவாழ்க்கையோ, இயேசுவைப்போன்ற தச்சுக்கூடமோ அல்லது அவரது சொந்த வீட்டாரின் பகையோ, நண்பனின் துரோகமோ.... அனைத்து சூழ்நிலையும் ஒன்றன் பின் ஒன்றாய் அனுப்பி, அவனை தேவன் நொறுக்குகிறார்! (ஏசாயா.53:10). அழிப்பதற்கு அல்ல... அவனை ஆசீர்வதித்து, தேவனுடைய ஜனத்திற்கு ஜீவன் தருவதற்கு.... மிகுந்த பலனை களஞ்சியத்தில் சேர்ப்பதற்கு! (யோவான்.12:24). சர்வ வல்ல தேவனால் அழைக்கப்பட்டு, அவரது ஊழியனாய் இருப்பது சொல்லொண்ணா பாக்கியம். ஆகிலும், தேவ மனிதனுக்குரிய விலைக்கிரயம் செலுத்த துணிவு நெஞ்சம் கொண்டவர்களோ இன்று வெகு சொற்பம்!

சொற்பமேயானாலும்... தேவனால் அழைக்கப்பட்ட, நொறுங்குண்ட இந்த உத்தம தாசர்களைக் கொண்டே தமது பணியை தேவன் இன்றும் நிறைவேற்றுகிறார்!!

**– ரத்னம்**